ஜூன் 14, 2015

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

இனிமையான குழந்தைகளே, நீங்கள் எதை விரும்பினாலும், உங்களுக்கு எத்தனை பிறவிகளுக்கு வேண்டுமானாலும், நீங்கள் எட்டு மணிகளின் ஜெபமாலையில் அல்லது நூற்று எட்டு மணிகளின் ஜெபமாலையில் வர விரும்பினாலும் உங்களுக்கு என்ன வேண்டுமானாலும், பாப்தாதா உங்களுக்கு பகிரங்கமாக அதற்கு வாய்ப்பு வழங்குகின்றார்.

ஒரு மாஸ்டராகி உங்கள் உரிமைகளை பெற்றுக்கொள்ளுங்கள். எந்த ஒரு பொக்கிஷங்களுக்கும் எந்த பூட்டும் தாழ்ப்பாளும் இல்லை. தாழ்பாலிற்கு(தாழ்பாளிற்கு) எந்த முயற்சியும் தேவையில்லை. வெறுமனே ஒரு எண்ணம் கொள்ளுங்கள்: நான் என்னவாக இருக்கின்றேனோ, எவ்வாறு இருக்கின்றேனோ, நான் உங்களுக்கு சொந்தம். மாயாவின் விளையாட்டுகளை கடந்துவிடுங்கள், வந்து பாபாவின் அருகில் அமர்ந்து கொள்ளுங்கள்.

இனிமையான பாபா, நாள் பொழுதில் நான் "நான் என்னவாக இருக்கின்றேனோ, எவ்வாறு இருக்கின்றேனோ, நான் உங்களுக்கு சொந்தம்", என்ற விழிப்புணர்வை மீண்டும் உறுதி செய்துக்கொள்கின்றேன். எந்த எதிர்மறையானவை வரும்போதும், நான் சென்று ஒளிகளின் வீட்டில் உங்களுடன் அமர்ந்துகொள்ளவேண்டும் என்பதை நினைவில் கொள்வேன்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

பாபா ஆத்மாவிற்கு: தொடர்ந்தும் தற்போதைய உங்கள் பிராப்திகளின் பட்டியலை உங்கள் முன் வைக்கவேண்டும்: அதன் பிறகு, "அது இப்போது நடைபெறும்", என்பது "இது தற்பொழுது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது" என்று மாறிவிடும். மனசோர்வடைவதற்கு மாறாக, உங்கள் இதயங்கள் சந்தோஷமடையும்.

நான் இந்த தெய்வீக வாழ்க்கையில் என்னுடைய பிராப்திகளை நினைக்கின்றபோது நான் மகிழ்ச்சியான ஒரு மனோபாவத்தை கொண்டிருக்கவேண்டும் என்பதில் உறுதியாக இருக்கிறேன். நான் என்னுடைய எதிர்கால கவலைகளை விட்டுவிடும்போதும் நிகழ்கால ஆசீர்வாதங்களில் தவழும்போதும் மகிழ்ச்சியான இந்த மனோபாவம் வருகின்றது.

**திருஷ்டி அல்லது தூயப் பார்வை**

பாபா ஆத்மாவிற்கு: தொடர்ந்தும் எப்பொழுதும் ஓர் ஏற்றபட்டிருக்கும் ஒளியின் ஃபேஷன் எப்போது ஆரம்பமானது? சங்கம யுகத்தில், நீங்கள் அனைவரும் தொடர்ந்தும் ஏற்றபட்டிருக்கும் ஒளியாக வாழும் வடிவத்தில் இருப்பதனால் இந்த

நினைவு தொடர்கின்றது. எனவே, நீங்கள் உங்கள் வாழும் வடிவங்களில் என்னவாக இருக்கின்றீர்கள்? தொடர்ந்தும் ஏற்றப்பட்டிருக்கும் விளக்குகள்.

இன்று என்னுடைய திருஷ்டியில், நான் மற்றவர்களை கடவுளின் ஏற்றபட்ட விளக்குகளாக நான் பார்ப்பதில் கவனம் கொள்வேன். நாம் எங்கு நடக்கயிருந்தாலும், நாம் இருளை விலக்கி வெளிச்சத்தை கொண்டு வருவோம்.

**ஓர் அலையை உருவாக்குதல்**

*நான் மாலை 7:00 மணி முதல் 7:30 மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஓர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.*